ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1967/55 - 2016 මැයි මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.05.19

*1967/55 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுத்துறை சட்டம்**

தேசிய விளையாட்டு சங்க கட்டளைத் தொடரின் 54 (3) ஆம் வாசகத்தின் கீழ் உத்தரவு

விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிரி ஜயசேகர ஆகிய என்னால் இலங்கை ஜூடோ சங்கத்தின் இடைக்கால நிர்வாக கால எல்லை 2015.07.15 ஆந் திகதியுடன் முடிவடைந்துள்ளமையினால் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுச் சட்டத்தின் 41 ஆவது பிரிவின் கீழ் 2013, ஒகத்து மாதம் 30 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1825/38 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் 54 (3) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய விளையாட்டுச் சங்கம் தொடர்பான கோவைக்கமைய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மற்றும் 2015, செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1932/52 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய 2016, மே மாதம் 20 ஆந் திகதி நடாத்தவிருந்த இலங்கை ஜூடோ சங்கத்தின் உத்தியோகத்தர் தெரிவின் போது விளையாட்டுக் கழகத்தினால் அதிகாரத்தைப் பொறுப்பளிக்கும் கடிதம் நேரடியாக விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு உரிய காலத்திற்குள் வழங்காமை மூலம் உத்தியோகத்தர் தெரிவின் போது இடம்பெறக்கூடிய பாதிப்புக்களைக் குறைப்பதற்கும் ஜூடோ விளையாட்டின் மேம்பாட்டிற்காக சகல விளையாட்டுக் கழகங்களினதும் செயற்பாட்டுப் பங்களிப்பினை எட்டுவதனைக் கருத்தில் கொண்டு இவ் உத்தியோகத்தர் தெரிவினை இரத்து செய்து மீண்டும் இலங்கை ஜூடோ சங்கத்தின் உத்தியோகத்தர் சபையைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பினை நடாத்துவதற்கு விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான திரு. களுதுற சாந்த ருவன்சந்திர டி சில்வா அவர்களுக்கு இத்தால் உத்தரவிடுகிறேன்.

சட்டத்தரணி தயாசிரி ஜயசேகர,
விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
*2016, மே 16.*

*06- 150*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*